கொள்ளப்பட இருக்கிறது. இதைத் தொடர்ந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய எண்ணத்தை ஈடேற்றலாம் என்று நான் கருதுகிறேன்.

9–35 மணி

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரூர், ஊத்தங்கரை ஆகிய இரண்டு பேரூராட்சிகளும் எனனுடைய தொகுதியில் வருகின்றன. அந்தப் பகுதிகள் மிகுந்த வறுமைக்கு உட்பட்ட மக்களைக் கொண்ட பகுதிகளாகும். ஆகவே, அரசு மேற்கொண்டு அபிவிருத்தித் திட்டங்களை அந்தப் பகுதியில் முதல் நடவடிக்கையாக அமலுக்குக் கொண்டு வந்து இந்தக் குறையைத் தீர்க்க முயற்சிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, அடுத்த முறை தேர்வு செய்கிறபோது அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் தையல் ஆசிரியைகள்.

* 3086 திரு. என். பழனிவேல்
திரு. வி. இராமசாமி:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் தையல் ஆசிரியைகளை அரசு ஊழியர்களாக ஏற்று மற்ற ஊழியர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் அவர்களுக்கும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் தையல் ஆசிரியைகளை அரசு ஊழியர்களாக ஆக்கும் திட்டம் எதுவும் இல்லை.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் தற்பொது சுமார் ஆயிரம் அல்லது 1,200 பேர்கள் தையல் ஆசியர்களாகப் பணிபுரிவதாகத் தெரிகிறது. இவர்களை அரசு ஊழியர்களாக ஏற்று, அவர்களுக்கு பதவி உயர்வு மற்ற சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று நீண்டகாலமாக, 10 ஆண்டுகளுக்கு மேலாக கோரிக்கை வைத்து ஒவ்வொரு அரசையும் கேட்டு வருகிறார்கள். அவர்கள் எல்லாம் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள், 10,15 ஆண்டுகள் பணிபுரிந்தவர்கள் ஆகவே, இவைகளை ஏற்று அவர்களை அரசு ஊழியர்களாக நியமிப்பதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, இவர்களை தேர்வு செய்ததன் நோக்கம் மகளிர்களுக்கு தையல் மற்றும் எம்ப்ராய்டரி பயிற்சி அளிக்க ஏற்கனவே நியமிக்கப்பட்டார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்னர் மகளிர் மன்றங்களுக்கு அளிக்கப்பட்ட தையல் இயந்திரங்கள் திருப்பிக் கொடுக்கப்படாத நிலையில், அந்தத் திட்டம் ஏற்கனவே அரசால் கைவிடப்பட்டதால், அவர்கள் அந்த வேலைகளைப் பார்க்க இயலாமல் வேறு பணிகளில் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். சிறு சேமிப்புத் திட்டம், குடும்ப நலத்திட்டம், சத்துணவுத் திட்டம், கண்சிகிச்சை முகாம் மற்றும் இவைகளுக்கான பதிவேடுகளைத் தயாரிக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். 26-6-1988 ஆம் தேதியிட்ட ஊரக வளர்ச்சித் துறை நிலையாணை 497-ல் தையல் ஆசிரியர்கள் பதவியை ஊரக மகளிர் நல அமைப்பாளர் என்று மாற்றப்பட்டு, அவர்களுடைய சம்பள விகிதம் ரூ. 505-10-555-15-615-20-795-25-845 என்று இருந்து சம்பளம் பெற்று வந்தனர். ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி ரூ.800-15-1,110-20-1,150 என்ற சம்பள விகிதத்தில் அவர்கள் இப்போது பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள் என்று சொல்கிறார். ஏறத்தாழ 908 தையல் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள், அத்தனைபேரும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் அல்ல. 190 பேர்கள் மட்டும் எஸ்.எஸ்.எல்.சி. தகுதி பெற்றவர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. இராமசாமி: தலைவர் அவர்களே, அவர்களுக்கு ஊதியம் மற்றும் மாற்று வேலைகள் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் பெருமகனார் அறிவித்து இருந்தாலும், அதை நிரந்தரமாக உத்தரவாதப்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, அனைத்து துறைகளிலும் இருப்பவர்களை அரசு ஊழியர்களாக்குவது என்றால் நாம் தான் அவர்களை சுமக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள் நலிவுற்ற நிலையில் இருக்கும் நிலையில் மற்ற நிலைமைகளைப் பார்க்கும்போது, இது ஒன்றும் குறைந்த சம்பளமாக நான் கருதவில்லை. எனவே, இந்தப் பணியில், இந்த சம்பளத்தில் அவர்கள் நிச்சயம் தொடர்ந்து நீடிப்பார்கள்.

பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்.

*3090 திரு. சோ. பால்ராஜ்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மத்திய பேருந்து நிலையமான பெரியார் பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?